# சபரகமுவ மாகாணக் கல்வித்திணைக்களம்
## விடுமுறைக்கால செயலட்டை
## சைவ நெறி – தரம் : 09
## நிவிதிகலை கல்வி வலயம்

### சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

ஐந்தாம் வாரம்

**அறிவுறுத்தல்கள் :**

1. சைவ நெறி பாட நூலின் பக்கம் 53 – 55 வரையுள்ள இரு தேவாரப்பதிகங்களையும் நன்கு வாசிக்குக.
2. அவ்விரு தேவாரப்பதிகங்களையும் அவற்றின் பொழிப்புரைகளையும் பயிற்சிக் கொப்பியில் பிழையின்றி வரிக்கிரமமாக பார்த்து எழுதுக.
3. அத்தேவாரப்பதிகங்கள் மறறும் பொழிப்புரைகள், பாடியவர், பண், தலம், சந்தர்ப்பங்களோடு மனனம் செய்து கொள்க.
4. பாட நூலின் பக்கம்56 இல் வழங்கப்பட்ட பயிற்சிகளை பயிற்சிக் கொப்பியில் எழுதி, பதிகங்களின் துணையுடன் விடையினைத் தெரிந்தெழுதுக.
5. பின்வருவனவற்றை பொறுத்தமானவாறு சோடிச் சொற்களாக்கி எழுதுக.

**காவிரியாற்றின் தென்கரை, பழம்பஞ்சுரம், திருவாரூர் தல இறைவன், சுந்தரரின் நா, சிவ நாமம், தேவாரப்பண், திருவாரூர் திருப்பதிகம், பண்மொழியம்மை, ஏழிசையாய் இசைப்பயனாய்…” , கறையூர், வீதிவிடங்கப் பெருமான், சுந்தரரின் மனைவி, நமசிவாயத்திருப்பதிகம், பத்திமையும் அடிமையும்…” , பரவையார், மற்றுப் பற்று…” , திருப்பாண்டிக் கொடுமுடித்தல இறைவன், சிவனை மறவாதது, நமசிவாய, கொடுமுடி நாதர், திருவாரூர் திருப்பதிக பத்தாவது பாடல், திருப்பாண்டிக் கொடுமுடித்தல இறைவி.**

**( உதாரணம் : காவிரியாற்றின் தென்கரை – கறையூர் )**

### அன்பு வழி

**அறிவுறுத்தல்கள் :**

1. சைவ நெறி பாடநூலின் பக்கம் 57 – 61 வரையான பாடப்பரப்பினை நன்கு கருத்தூன்றி வாசிக்குக.
2. அப்பாடப்பரப்பின் முதலாவது பந்தியினை பயிற்சிக் கொப்பியில் பிழையின்றி உறுப்பமைய பார்தது எழுதுக.
3. பாடநூலின் 62 ஆம் பக்க பயிற்சியினை உமது பயிற்சிக் கொப்பியில் எழுதி, விடையெழுதுக.
4. பாடநூலில் சரியை, கிரியை, யோகம், ஞானம் போன்றவற்றின் செயற்பாட்டை விளக்கித் தரப்பட்ட திருமந்திரப் பாடலடிகள் நான்கினையும் எழுதி, மனனம் செய்க.
5. அட்டாங்க யோகங்களையும் அவற்றின் விளக்கங்களையும் ஒரு அட்டையில் தடித்த எழுத்துக்களால் அழகாக எழுதுக. (அவற்றை முறையாக மனனம் செய்து கொள்க)
6. பாடப்பரப்பின் துணையுடன் பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| நான் நெறிகள் | ஒழுகிய நாயன்மாரகள் | நான் மார்கங்கள் | இறைவனுடனான நாயன்மார்களின் உறவு முறைகள் | அடங்கும் செயற்பாடுகள் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |

**மேலதிக செயற்பாடுகள் :**

1. சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் இறைவனுக்கும் இடையிலான உறவினை ஏழிசையாய்…” , மற்றுப்பற்று…” பதிகத்தினூடாக விளக்கி எழுதுக.
2. நான்கு நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றுக்குறிப்புக்கள் பற்றி தேடியறிந்து, அவர்களின் காட்சிப்படங்களுடன் ஒரு கையேட்டைத் தயாரிக்குக.